

முழு வண்ணச்
சித்திரக் கதை
ஜூனியர்
லயன் காமிக்ஸ்
சூப்பர் சர்க்கஸ்!
ரூ. 2/-


அடுத்த வெளியீடு!
உலகம் சுற்றும் அலிபாபா!
பிப்ரவரி 15ல் கிடைக்கும்
ஜூனியர் லயன் காமிக்ஸ்
முழு வண்ணத்தில்
ரூ. 1.25



# ஜூனியர் லயன் காமிக்ஸ்



காமிக்ஸ் பிரியர்களே, 1-1-87

புத்தாண்டில் புதிய இதழில் சந்திக்கிறோம் என்பதை நினைக்கும் பொழுது மிகவும் உற்சாகமாய் உள்ளது!

மிகக் குறுகிய காலத்திற்குள் காமிக்ஸ் உலகில் தனக்கென ஒரு எவரெஸ்ட் உச்சியை எட்டிப் பிடித்துக் கொண்டு விட்ட நமது 'லயனி'ன் மற்றுமொரு படைப்பு தான் - இந்த ''ஜூனியர்''!

நெற்றிப் பின்னைக் கழற்றிய மறு கணமே இது ஒரு மாறுபட்ட இதழ் என்பது உங்களுக்குப் புரிந்திருக்குமென்று நினைக்கிறேன்! சித்திரங்கள்-கதையமைப்பு-வண்ணங்கள்-விலை-சைஸ்-கதாபாத்திரங்கள்-எல்லாமே வித்தியாசமாக இருக்கும்!

ஜூனியரின் மாதிரிப் பிரதியைப் பார்த்த பலரும் ''இத்தனை குறைந்த விலையில் எப்படி இவ்வளவு பெரிய கதையை-அதுவும் கலரில் வெளியிட முடிகிறது? என்று கேட்டார்கள்! ஏன், உண்மையைச் சொல்லப் போனால், ஆரம்பத்தில் எங்களுக்கே கூட இந்த சந்தேகம் ஏற்பட்டது!! ஆனால், தரமான கதைகளை நீங்கள் ரசிப்பதற்கு விலை ஒரு குறுக்கீடாக அமையக் கூடாது என்ற எண்ணத்தில் விலையை மி க மி கக் குறைவாக நிர்ணயித்துள்ளோம். இதே கதையின் ஆங்கிலப் பதிப்பு சுமார் 30 ரூபாய் விலையில் விற்பனையாகிறது என்பதைக் கருத்தில் கொள்ளும் பொழுது, ஜூனியர் செய்துள்ளது ஒரு சர்வதேச சாதனை என்பதை மறுக்கவே முடியாது!

''எடுத்த எடுப்பிலேயே எப்படி இவ்வளவு தைரியமாக ஸ்பெஷல் போடுகிறீர்கள்''? என்றும் சிலர் கேட்டார்கள். எங்கள் வாசகர்கள் மீதும், இந்தப் புதுமையான கதை பாணி மீதும் எங்களுக்குள்ள அசைக்க முடியாத நம்பிக்கை தான் காரணம் என்று பதிலளித்தேன்!

இந்த இதழிலிருந்து அறிமுகமாகும் கதாநாயகன் ''லக்கி லூக்'' ஒரு சர்வதேச சூப்பர் ஸ்டார். உலகின் மூலை முடுக்கிலுள்ள காமிக்ஸ் பிரியர்கள் அனைவருக்கும் இந்தத் துப்பாக்கி வீ ர ன் ஒரு மறக்க முடியாத உயிர் நண்பன்! லக்கி லூக்கிற்கு நம் சுதந்திரத்தின் வயதாகிறது. இருவருமே 1947-ல் உருவாக்கப் பட்டவர்கள். லக்கி லூக்கிற்கு உயிர் கொடுத்து காமிக்ஸ் உலகில் உலவ விட்டவர் ஓவியர் மோரிஸ். எந்நேரமும் சிகரெட் குடித்துக் கொண்டேயிருக்கும் இந்தக் கார்டூன் துப்பாக்கி வீரனின் ஒவ்வொரு நீதிப்போராட்டமும் கிட்டத்தட்ட 55 கோடி மக்களால் ரசிக்கப்பட்டு வருகிறது! ஏற்கனவே இந்தப் பட்டியலில் நான் சேர்ந்து விட்டேன்! நீங்களும் விரைவில் சேர்ந்து விடப் போகிறீர்கள்!!

கதையை படித்து முடித்த பின்னர் உங்கள் விமர்சனங்களை எனக்கு எழுதி அனுப்புங்களேன்! அடுத்த இதழிலிருந்து உங்கள் கடிதங்களுக்கென ஒரு பக்கம் காத்திருக்கும்!

அடுத்த இதழின் விலை ரூ 1-25/ 15-2-87 ல் கடைகளில் கிடைக்கும். தற்சமயம் சந்தாக்கள் ஏற்றுக் கொள்வதில்லை என்பதால் அருகாமையிலுள்ள விற்பனையாளரிடம் உங்கள் பிரதிக்கு சொல்லி வைத்து விடுங்கள்!

''தாய் எட்டடி பாய்ந்தால் குட்டி பதினாறடி பாயும்'' என்பதை நிரூபிக்கும் வகையில் தொடர்ந்து ஆதரவு காட்டி, ஜூனியரை அமோக வெற்றியடையச் செய்வீர்களென்ற திடமான நம்பிக்கை எனக்குண்டு!

மீண்டும் அடுத்த மாதம் சந்திப்போம். அதுவரை Happy Reading!

அன்புடன்,
S. விஜயன்
(ஆசிரியர்)



முகவரி: ''ஜூனியர் லயன் காமிக்ஸ்'' வெளியிடுவோர்: ''லயன் புக் ஹவுஸ்'' த. பெ. எண். 55, சிவகாசி-626 123.

# குதிரைவீரன் லக்கி!

## ஒரு அறிமுகம்!




அந்தக் குதிரையும் சாமான்யப்பட்டதல்ல! எவ்வித தடங்கல் குறுக்கிட்டாலும் அதை ஒரே கணத்தில் தகர்த்தெறிந்து விடும்! உதாரணத்திற்கு இந்தக் கணவாயை எப்படியெல்லாம் தாண்டிச் செல்கிற தென்றுபாருங்களேன்!
ஜெய் சூப்பர் மேன்!
இது போக நிறைய வித்தைகளைப் பயின்று வைத்திருந்தது அந்த சூப்பர் குதிரை!
குழம்பு தயாராகி விட்டவுடன் என்னை எழுப்பு! ஒரு குட்டித் தூக்கம் போடப் போகிறேன்!
அச்சச்சோ - தீப்பெட்டி நனைந்து விட்டதே!
பின் தொடர்ந்து வரும் எதிரிகளை முட்டாளாக்க இந்தக் குதிரை வசம் ஒரு தந்திரம் உள்ளது-
சபாஷ் ஜாலி! இப்படி ரிவர்ஸில் நாம் செல்வோமென்று எவரும் எதிர்பார்க்க மாட்டார்கள்!
78-79-80: அண்ணன் என்ன சொன்னாலும் சரி, 100க்கு மேல் நம்மால் ஸ்கிப்பிங் போட முடியாது!


இந்தத் துப்பாக்கி வீரனுள் ஒரு நீதிக் காவலன் குடியிருக்கிறான்- இந்தக் காட்சியைப் பாருங்கள்-
என்ன ஆச்சுடா பயலே?
ஆ-ஆ-ஆ-ஆ!
அந்த நெட்டை ஆள் என் பிஸ்கெட்டை பறித்துக் கொண்டான்!
ஒரே நொடியில் திரும்பி வருகிறேன்-
ஆ-ஆ-ஆ-ஆ-!
ஜெயிலிலிருந்து தப்பியோடுவதும், பிடிபடுவதுமாய் போய் விட்டது நம் பிழைப்பு!
தப்பி வந்தவுடன் நேராக ஊரை விட்டு ஓடியிருக்க வேண்டும்!
எல்லாம் இந்தத் தடியனால் வந்த வினை!
ஆ-ஆனால் எனக்கு அகோரமாய் பசி எடுத்தது- அதனால் தான் பிஸ்கெட்டை
ட்டூழியம் செய்யும் அக்கிரமக்காரர்களை ஒடுக்கும் தீரன் இவன்-
ந்தப் பணத்தை மரியாதையாக வரிடம் திருப்பிக் கொடு!
எப்படியடா ஒரே கட்டில் ஐந்து ஜோக்கர் வந்தது என்று நான் முழித்துக் கொண்டிருந்தேன்!
தொலைந்தாய் லக்கி! உன்னிடம் இப்பொழுது துப்பாக்கி இல்லை! உன்னை சுடப் போகிறேன்!
ம் என்ற வார்த்தைக்கு வனைப் பொருத்த வரை ாருளே கிடையாது-
திரும்பித் தொலையடா செவிடா! ஏதாவது செய்வேன்!
எதற்கும் கலங்கா எஃகு மனிதன் இவன்-!
ஆ ஆ ஆ ஆவ்! பாட்டுப் பாடியே என்னை கொன்று விடுவாய்!
நியாயத்தின் அடிமை இவன்-
இவன் தான்-இந்த அற்புத மனிதன் தான் - இந்த லக்கி லூக் தான்- நமது ஹீரோ!
தனிமையே என் துணைவன்!
தனிமையே என் வாழ்க்கை!


ஸூப்பர் சர்க்கஸ்
அமெரிக்காவின் டெக்ஸாஸ் பகுதியில் ஒரு நாள்—
செவ்விந்தியர்கள் துரத்தி வருகிறார் கள்! வேகமாய்ப் போ ஜாலி!
ஃப்பூ- இதற்குப் பேசயா அலட்டிக் கொள்வது?
திடீரென—
ஹல்லோ- என்னாயிற்று அவர்களுக்கு?
சுத்த சோதாப் பசங் கள்-என்று நான் தான் முன்னமே சொன்னேனே!
!!!
!!!
7



நீ இங்கேயே நில் ஜாலி!
அண்ணே - திரும்பிப் பாராமல் ஓடி விடுவோம்! வீண் வம்பு நமக்கெதற்கு?
இந்தப் பகுதிக்கு இந்த விசித்திர மிருகம் எப்படி வந்து சேர்ந்ததாம்?
அட, கொஞ்சம் நில்லு தம்பி- ரோமியோவை சுடப் போகிறீயா என்ன?
?
பார்த்தால் ரோமியோ சாதுவாய்த் தெரியும் ஆனால் 'சாது மிரண்டால காடு கொள்-ளாது' என்பது தெரியுமல் லவா?
அந்தப் பிரபல சர்க்கஸின் உரிமையாளரும், உடமையாளரும்-சாட்சாத் இந்த கேப்டன் மோரிஸ் தான்! வணக்கங்கள்!
யாரய்யா நீர்? இந்த மிருகம் உம்முடை-யதா?
அப்படிக்கேள் சொல்கிறேன்-ரோமியோ ஒரு இந்திய யானை! பிரபல ''சூப்பர் சர்க்கஸின்'' கணக்கற்ற நட்சத்திரங்களுள் இவரும் ஒருவர்!
வரும் வழியில் ஒரு சக்கரம் ஒடிந்து விட்டதால் எங்கள் பயணம் தடை பட்டு விட்டது! கொஞ்சம் ஒத்தாசை செய்யுங்களேன்!
பயத்திலேயே மீதி முடியும் நரைத்து வெள்ளையாகி விடப் போகிறது எனக்கு!


சக்கரத்தை செம்மை படுத்தும் வரை இங்கே கூடாரமிடத் தீர்மானித்தோம் மிஸ்டர்-?
என் பெயர் லக்கி லூக்!
மிஸ்டர் லக்கி லூக் நமக்கு உதவி செய்வதற்கு அன்புடன் முன்வந்துள்ளார்- இதோ- சூப்பர் சர்க்கஸின் இதர அட்டகாச நட்சத்திரங்களை உங்களுக்கு அறிமுகப்படுத்துவதில் பெருமையடைகிறேன்-
இவர்தான் வீராங்கனை வெனெஸா! உலகப்பிரசித்தி பெற்ற பார் ஆட்டக்காரர்! அத்தோடு என் மனைவியும் கூட-
இவள் ஜூலி- நிகரற்ற கத்தி வீச்சுப் பெண்மணி! அது மட்டுமல்ல என் மகளும் கூட-
இது ஜெஸ்டர்- அண்ட சராசரங்களில் மிக மிக வேடிக்கையான கோமாளி என்று பெயர் பெற்றவர்- ஜூலியின் கணவரும் இவர் தான்- ஆக என் மருமகனும் கூட!
இனி நாலுகால் நட்சத்திரங்களைக் காட்டுகிறேன்! ஏற்கனவே யானை ரோமியோவை சந்தித்து விட்டீர்கள் அது போக எங்களிடம் இரண்டு குதிரைகளும், ஒரு அற்புதமான கழுதையும் உள்ளன ஆனால் முதலில், எங்களது சூப்பர்-ஸ்டாரை உங்களுக்கு அறிமுகப்படுத்துகிறேன்!
இதோ-சிங்கராஜா நெல்ஸன்! உலகமெங்கும் பார்வையாளர்களை கதிகலங்கடிக்க வைக்கும் எங்கள் காட்டரசன்!
வயது ஏறிவிட்டது போல் தோன்றினாலும் நல்ல திடமாக உள்ளது நெல்ஸன்-
அதன் ஒரு கண் மட்டும் மக்கர் பண்ணாதிருந்தால் இன்றும் நெல்ஸனை தொனிக்க ஊருக்குள் வேறு சிங்கமே இருக்க முடியாது!


கடைசியாக நியூயார்க் நகரில் ஷோ நடத்திக் கொண்டிருந்தோம்! ஆனால் போட்டியாய் பல சுண்டைக்காய்கள் திடீரென முளைத்ததால்-
பெருந்தன்மையாக விலகிக் கொண்டு அமெரிக்காவின் இதர மாநிலங்களில் ஒரு சூருவளிச் சுற்றுப் பயணம் அடிப்பதென தீர்மானித்து விட்டேன்! எப்படி என் ஐடியா?
ஆமாம்-இதற்கெல்லாம் குறைச்சலில்லை! வழி-நெடுக நிற்கும் ஒவ்வொரு ஊரிலும்-குடித்து-சூதாடி இருந்த கொஞ்ச-நஞ்ச சர்க்கஸ் உபகரணங்களையும் இழந்தாயிற்று-
இப்பொழுது மூன்றே மூன்று வண்டிகள்தான் மீதம் உள்ளன. அவற்றிலும் ஒன்று ஒடிந்த சக்கரத்துடன் கிடக்கிறது!
அலட்டிக் கொள்ளாதே-டியர்! எல்லாம் சரியாகி விடும் பார்!
சரி, சரி, அந்த செவ்விந்தியர்கள் மறுபடி வருமுன் ரிப்பேர் வேலையைப் பார்த்து முடிப்போம்! ''கோயட் கோட்டை'' நகரத்து வருடாந்திர குதிரை சாகஸப் போட்டியில் பங்கேற்க அவசரமாய் நான் போக வேண்டும்!
போட்டியா? அப்படியானால் ஜனங்கள் நிறையப் பேர் பார்ப்பதற்கு வருவார்களே! பேசாமல் நாங்களும் கோயட் கோட்டையில் கூடாரமிட்டு விட வேண்டியது தான்!
ஒரு வழியாக முடிந்தது-
உங்களுக்கு எப்படி நன்றி சொல்வதென்றே தெரிய- ஆ ஆ! உங்களுக்கென்று ஒரு பிரத்யேகக் காட்சியை ஏற்பாடு செய்தால் போயிற்று!
ஆ - ஆனால் எந்த நிமிஷமும் செவ்விந்தியர்கள் வரும் அபாயம் உள்ளதே-
அதெல்லாம் பின்னர் பார்த்துக் கொள்ளலாம்-
கனவான்களே, சீமாட்டிகளே, இளைஞர்களே-உலகப் பிரசித்தி பெற்ற- அனைவரின் பாராட்டையும் பெற்ற-அதி அற்புதமான-ஒப்பற்ற-நிகரில்லாத-சூப்பர் சர்க்கஸைக் காண வந்ததற்கு நன்றி!



அதே சமயம் - செவ்விந்தியர் குடியிருப்பில்-
தலைவா! பெரிய பூதம் பார்த்தோம் தலைவர்- கருப்பாய்-
முன்னுக்குப் ''பெரிய'' வாலும், பின்னுக்குச் சின்ன வாலும் இருந்தது-
அஹ்! அஹ்! அஹ்! காலங்காத்தாலேயே ''மருந்து'' சாப்பிட்டு விட்டீர்களா?
அச்சச்சோ- இப்போதெல்லாம் நாங்கள் ''மருந்து'' சாப்பிடுவதே கிடையாது தலைவா!
நம்பாவிட்டால் எங்களோடு வாருங்கள்! பூதத்தை காட்-டுகிறோம்.
ஆல்ரைட்! வருகிறேன். ஆனால் இதில் உங்கள் கோல்மால் ஏதாவது இருந்தால்- தொலைந்தீர்கள்!
அங்கு சர்க்கஸிலோ - பிரத்யேகக் காட்சி தொடர்ந்து கொண்டிருந்தது —
தேவலையே! இந்த குதிரைகளுக்குக் கூட கொஞ்சம் மூளை இருக்கிறதே!
இனி வீராங்கனை ஜூலி, தனது கத்தி வீச்சுத் திறனைக் காட்டப் போகிறாள்!
சதக்!
சதக்!
சதக்!
திடீரென —
!
சதக்!
ஜூலி- நிகழ்ச்சியில் மாற்றம் செய்வதாக இருந்தால் முன் கூட்டியே சொல்லலாமே!
இது ஜூலியின் வேலையல்ல- செவ்விந்தியர்கள் வந்து விட்டார்கள்!


எதற்க்காக கூடாரத் தை சுற்றிச் சுற்றி வருகிருர்கள்? இ-இல்லை கிறுகிறுப் பில் எனக்குத் தான் அப்படித் தெரிகிறதா?
மொத்த மாய் முற்றுகை யிட்டு விட் டார்கள்.
நாம் தொலைந்தோம்-
உங்கள் யானை மீது சவாரி செய்ய முடியுமா?
தாராள மாய்-
மறுகணம்—
டுமீல்!
டுமீல்! டுமீல்!
தலைவருக்கு, இப்பொழு தாவது எங்கள் பேச்சில் நம்பிக்கை வருகிறதா? இதற்கு முன்னர் இப்படிப்பட்ட சாத்தான்களை தலைவர் பார்த்ததுண்டா?
அஹ்! அஹ்! அஹ்!


அமைதி!
செவ்விந்தியத் தோழர்களின் குடியிருப்பைத் தாண்டி, கோயட் கோட்டை நகருக்கு செல்ல விரும்புகிறோம்-சிகப்பு சகோதர னுக்கு தீங்கு இழைப்பது எங்கள் நோக்கமல்ல-
குடியிருப்பது ராட்சஸ கூடா ரங்களில்-சவாரி போவது ராட்சஸ சாத்தான்களில்-உள்ளே இருக்கும் ஆட்களும் ராட்சஸங்களா
இல்லவே இல்லை அன்பரே! ஆனாலும் இந்தக் குழுவினரால் பல ராட்சஸ சாதனை களை உங்களுக்காக செய்து காட்ட முடியும்-
மோரிஸ்- உங்களுக்கு மறை ஒரேடி யாகக் கழன்று விட்டதா? இந்த வெறியர்கள் நம் மைக் குதறி விடுவார்கள்!
என்ன இருந்தாலும்- இவர்களும் பார்வை யாளர்கள் என்பதை மறந்து விடாதே! ஒரே நாளில் இரண்டு ஒத்திகை பார்ப்பது நமக்கும் நல்லது தானே!
ஜமாய்த்து விடலாம்-வா!
இதுவும் ஒரு விதத்தில் நல்லதுதான் மிஸஸ் மோரிஸ்-செவ்விந்தி யர்களின் கவனத்தை திசைதிருப்ப இது உதவும்!
ஆக, மீண்டும் ஒரு பிரத்யேகக் காட்சி-
அன்பர்களே - மனிதனுக்கும், இரத்த வெறி பிடித்த பயங்கர மானதொருவிலங்கிற்குமிடையே நடக்கவிருக்கும் மாபெரும் யுத்தத்தைப் பார்க்கப் போகிறீர்கள்!
பளார்
விலங்குகளைக் கொண்டு வாருங்கள்!
கொர்ர்


வழக்கமாய் எங்களிடம் ஆறு சிங்கங்களும், ஒன்றிரண்டு புலி, சிறுத்தைகளும் இருக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்-
கொர்ர்ர்
ஆனாலும் சொற்ப வயதிலேயே அனைத்தும் செத்துத் தொலைந்து விட்டதால் இப்பொழுது எஞ்சி-யிருப்பது இந்தக் காட்டரசன் மட்டுமே
?
ஹாா- நெல்ஸன்- ஹாாா-
க்ர்ர்ர்
அப்!
கொர்ர்ர்-
ஆஆஆஹ்!
இனி ஐந்து நிமிட இடைவேளை!
க்ர்ர்ர்
பாப்கார்ன்- கடலை—
?
இதோ-நீங்கள் அனை வரும் காணத் துடித் துக் கொண்டிருந்த, ஈடு இணையற்ற-சிரிப் புலகச் சக்கரவர்த்தி-
வீரர்களே- உஷார்!
தி-திடீரென்று என்னவா யிற்று?
ஜெஸ்டர் போட்டுள்ள கோமாளிகளுக்கான முகச்சாயத்தை தவறு தலாகப் போர்ச்சாயம் என்று நினைத்து விட்டார்கள்!


தப்பித்து ஓடுங்கள்- நான் பார்த்துக் கொள்கிறேன்!
தக்!
கும்!
பளார்
பப்பர பப்பப்பாய்ங்!
காவல் படை!
இதை சாக்காக வைத்துக் கொண்டு, இந்த அரைப் பைத்தியங்களிடமிருந்து தப்பி விடலாம்! போவோம்-வா!
சிறிது நேரம் கழித்து—
இங்கே என்ன செய்கிறீர்கள் மிஸ்டர் லக்கி?
அதையே தான் நான் இப்பொழுது என்னிடமே கேட்டுக் கொண்டிருந்தேன்!
இந்த சர்க்கஸின் சொந்தக்காரர்கள் எங்கே போய் விட்டார்கள்?
இதோ இருக்கிறோம்!
?!?



ரொம்ப தாங்க்ஸ்! நல்ல சமயத்தில் வந்து காப்பாற்றி னீர்கள்! உங்க ளுக்கு எப்படி நன்றி—
ஹெ! ஹெ! கடமை யைத்தானே தாங் கள் செய்கிறோம் மேடம்!
அருமையானதொரு யோசனை என்னிடம் உள்ளது! படையின ருக்காக ஒரு விசேஷக் காட்சியை ஏற்பாடு செய்தால் போயிற்று!
அன்பே, ஒரே நாளில் மூன்று காட்சிகள் நடத்து மளவிற்கு சூப்பர் சர்க்கஸ் முன்னேறி விட்டது பார்த்தாயா?
ஒரு வழியாக "விசேஷக் காட்சியும்" முடிவு பெற்ற பின் ஒரு விசித்திர ஊர் வலம் கோயட் கோட்டையை நோக்கிப் புறப்பட்டது-
அதோ நகரம் வந்து விட்டது - இனி உங் களுக்கு அபாயம் ஏதும் கிடையாது!
ஊம்- அபௌட் டர்ன்! நாம் புறப்படுவோம்!
நானும் விடை பெறுகிறேன் காப்டன்
உங்களுக்கு பெரிதும் கடமைப்பட்டுள்ளோம் மிஸ்டர் லக்கி! எந்நே-ரம் வந்தாலும் உங்க ளுக்காக சூப்பர்-சர்க் கஸில் ஒரு சீட் காத் திருக்கும்!
டாடா!
கோயட் கோட்டையின் முக்கிய வீதி—
கன் கைக்கடை
ரீகன் சவக் கிடங்கு
ரீகன்
ரீகன்



ரீகன் வருடாந்திர குதிரை சாகஸப் போட்டிக்கு இங்கே பதிவு செய்யுங்கள்!
ரீகன்
மதுபானக் கடை
ரீகன்
ஒரு பீர் கொண்டாப்பா!
இதோ!
போட்டியில் கலந்து கொள் வதற்குஎன்ன செய்ய வேண்டும்?
அதோ வருகிறாரே மிஸ்டர் ரீகன்-அவ ரிடம் போய்க் கேள்!
ஹலோ மிஸ்டர் ரீகன்—
என்னை எல்லோரும் ''வைரப் பல்'' ரீகன் என்பார்கள்! நீயும் அப்படியே கூப்பிட லாமே!
பயங்கரக் குதிரை சாகஸப் போட்டியில் கலந்து கொள்ள விரும்புகிறாயாக்கும்? ஓ.கே! என் ஆபீசுக்கு வா-
ஹே-ஹேய்-பசங்களா-லோ-ரோட்டில் ஒரு யானை சுற்றி வருகிறது-நான் உளறுகிறேன் என்று நினைக்காதீர்கள்-நிஜமாய் தான்-
ஓ-அது சர்க்கஸ் யானையாக இருக்கும்! நாம் ஆபீஸுக்குப் போவோமா?
சர்க்கஸா? இது என்ன புதுக் கதை?
''கோயட் கோட்டைக்கு'' இன்று ஒரு பொன்னான நாள்! உலகப் புகழ் பெற்ற சூப்பர்-சர்க்கஸ் உங்களை மகிழ் விக்க வந்துள்ளது!
அடி சக்கை! வழக்கமான குதிரைப் போட்டிக்கு இது கொஞ்சம் வித்தியாசமாக இருக்கும்!
!
ஆமாம்! நல்லதொரு மாறுதல் தான்!


திமிர் பிடித்த பயல்கள்! ஒரு ஒட்டை சர்க்கஸை வைத்துக் கொண்டு, என் போட்டிக்கு இடைஞ்சல் பண்ண நினைக்கிறார்களா?
என் பெயரை போட்டியாளர்கள் பட்டியலில் சேர்த்து விட்டால் நான் கிளம்ப சௌகரியமாக இருக்கும்!
கனவான்களே, இந்தப் பாலைவனப் பிரதேசத்திற்கு உயிரூட்ட நாங்கள் வந்துள்ளோம்!
ரீகன் விஸ்கி ...பருகி மகிழ்வீர்.
கொஞ்சம் ஒதுங்கி நில் அப்பனே!
ரீகன்
ஆ ஆ—ரொம்பத் தாகமாக இருக்கிறது!
ரீகன்
சூப்பர் சாக்கஸ்
க்ர்ர்ர்—
இதென்ன சரக்கு? சுத்த கண்றாவியாய் இருக்கிறதே!
"கோயட் கோட்டையில்" நம்மில் ஒருவருக்குத் தான் இடம் உள்ளது!
இது போன்ற வசனங்களை நான் பல தடவை கேட்டாயிற்று மிஸ்டர்-இதெற்கெல்லாம் பயந்தவன் இந்த கேப்டன் மோரிஸ் அல்ல!
?
இது என்னுடைய நகரம். இங்கு எந்த டப்பாங்கூத்து சர்க்கஸின் வரவையும் நான் விரும்பவில்லை!
நாய்கள் குரைத்துக் கொண்டே தான் இருக்கும்- ஆனால் சூப்பர்-சர்க்கஸின் பயணத்தை தடுக்க முடியாது!
அதையும் தான் பார்ப்போமே!
?
டுமீல்!


?!?
நிராயுதபாணியாக நிற்கும் எவருக்கும் தீங்கு நேரயிருப்பதை என்னால் பார்த்துக் கொண்டு சும்மா இருக்க முடியாது- என் பெயரையும் போட்டியில் சேர்த்துக் கொண்டீர்களேயானால் நான் புறப்படுகிறேன்!
கும்!
டமார்!
என் விஸ்கி பாட்டில்கள்!
என் பல்லைக் காணோம்- என்-வை - வைளப் பல்லைக் காணோம்!
இவனது வயிறு ஏன் இப்படி பீப்பாய் மாதிரி இருக்கிறது என்று புரிந்து விட்டது - தண்ணீரைக் குடித்துக் குடித்து அடைத்து வைத்திருக்கிறான் பயல்-
வாருங்கள் காப்டன்- இங்கே நமக்கு இன்னும் என்ன வேலை?
ஒழிந்து போங்கள்! இங்கே வந்து - விடாதீர்கள்- புரிகிறதா?
பெரிய தவறு செய்து விட்டாய் அப்பனே! ரோமியோ இதை சீக்கிரத்தில் மறந்து விடாது!



இ-இந்த ஊருக்குள்- ஒருகாட்சிகூட நடத்த விடமாட்டேன்- பாஸ்!
அண்ணே-உங்க வைரப் பல் கிடைச்சுடுச்சு!
சூப்பர் சர்க்கஸ்
ரீகன்
ரீகன்
யாராவது சர்க்கஸ் என்று என் முன்னால் பேசட்டும்- தொலைத்து விடுகிறேன்!
அதே சமயம் நகர எல்லையில்-
இந்த ஊரே ரீகனின் கைக்குள் உள்ளது-அவனைப் பகைத்துக் கொண்டது புத்திசாலித் தனம் இல்லை!
ஆமாம்-மிஸ்டர் லக்கி-பேசாமல் வேறு எங்காவது நாங்கள் போய் விடுவது தான் நல்லது!
நெவர்! எ-எந்த குடிகாரத் தடியனுக்காகவும் இந்த "சூப்பர் சர்க்கஸ்" நிற்காது-
ஆல் ரைட், மிஸ்டர் லக்கி-உங்கள் உதவிக்கு மிக்க நன்றி! ஏற்கனவே உங்களுக்கு நிறைய தொல்லை கொடுத்து விட்டோம்!
பேசாமல் எங்களோடு தங்கிவிடுங்களேன் லக்கி ஸார்!
பிரமாதமான ஐடியா! துப்பாக்கி சுடுவதில் நீங்கள் கில்லாடி-குதிரைசாகஸத்திலும் நிகரற்றவர்-எங்கள் சர்க்கஸில் சேர்ந்தால் உங்களை புகழின் உச்சிக்கே என்னால் இட்டுச் செல்ல முடியும்!
உள்ளூர் சுடுகாட்டிற்கு "புகழின் உச்சி" என்று பெயரானால் நீங்கள் சொல்வது நிஜமாக வாய்ப்புண்டு!
அந்த ரீகனின் கொட்டத்தை யாராவது அடக்கியே தீர வேண்டும்-ஓ.கே. நான் உங்களுடன் தங்குகிறேன்!
ஹையா — ஊர்வலம் புறப்படட்டும்!
இதென்னடா புதுக் கூத்தாய் இருக்கு? இந்தப் பைத்தியங்களோடு சேர்ந்து அண்ணனுக்கும் மறை கழன்று விட்டதா?


வைரப் பல் அண்ணே-அந்தக் கோமாளிப் பசங்கள் திரும்பவும் ஊ நக்குள் வருகிருர்கள்-ஏதோ நோட்டீஸ் கொடுத்துக் கொண்டிருக்கிருர்கள்!
என்னது?
பசங்களா-என்னேடு வாருங் கள்! அவர்களை நெளிசல் எடுப்போம்!
சத்தம் போடாதீர்கள் தாத்தா - கலாட்டா வரப் போகிறது!
நான் சர்க்கஸைப் பார்க்க வேண்டும்!
அதோ வருகிருன் கள்!
வழியை மறிக்காமல் விலகி நில்லும் ஐயா-
திரும்பவும் இந்த ஊருக்குள் நுழை யாதே என்று சொன்னே-னில்லையா?
இங்கு உங்கள் டப்பாங் கூத்து சமாச்சாரமெல் லாம் தேவை யில்லை-
அட-அட-ரோமியா பையா இப்படி உணர்ச்சி வசப் படுவது தப்பப்பா!
அடேய் மோரிஸ் மடையா-இந்தச் சனியனை நிறுத்தித் தொலை!
இப்படி திட்டுவதன் மூலம் ரோமியோவை இன்னும் கொதிப் படையச் செய்கிருய்-மரியாதையாய் ஓடிக் கொண்டேயிரு!
அடிரா சக்கை —


ம்ம்-ஜல்தி ஜாலி!
மோரிஸ்! காப்பாற்று!
ஆங்-இனி உறுதியாக நின்று கொள் ஜாலி!
ஹேய்-வேண்டாம் லக்கி!
தொடர்ந்து—
சத்!
என்னண்ணே-பசங்களை துரத்தி விட்டீர்களா?
க்ராக்!
ரோமியோ-போதும் விளையாட்டு!
பார்த்தாயா ரோமியோ-இங்கே யாரும் இல்லை! உணர்ச்சி வசப்பட்டு ஏதேதோ நீயாக கற்பனை செய்து விட்டாய்! வா-போகலாம்!
அடுத்த அறையில்—
பிசாசு போய் விட்டதா?



வீதிகளில் மக்கள் தம் மகிழ்ச்சியைக் காட்டுகின்றனர்-
கூட்டத்தின் கரகோஷம் உனக்குப் பிடித்துப் போய் விட்டது-இல்லையா ஜாலி?
ஹ்ம்ம்ம் - ரசிகர்களின் அன்புத் தொல்லையைத் தாங்கித் தானே தீர வேண்டும்!
கூடாரத்திற்குத் திரும்பினர்-
உங்கள் அபார சர்க்கஸ் வேலையைப் பார்த்து மக்கள் ஆரவாரித்தனர் லக்கி! 'சூப்பர் சர்க்கஸ்'க்கு ஆதரவாய் நிறையப் பேர் உள்ளனர் இப்பொழுது!
ரீகனை மறந்து விடாதீர்கள்! பழி வாங்க துடித்துக் கொண்டிருப்பான்!
வெளியே குதிரை மாநாடு நடந்து கொண்டிருந்தது-
ஹ்ம்ம்-செவ்விந்தியர்கள் - சண்டை- அடிதடி- கலாட்டா-எல்லாம் சரிதான்!
ஆனால் சர்க்கஸில் இருப்பதற்குத்தனித் தகுதி தேவை அப்பனே!
உதாரணத்திற்கு-எங்கள் மாஸ்டர் சீட்டியடித்தால் போதும்! மறு கணம் நாங்கள் அவரருகே போய் பார்ப்போம்!
ஹெஹ்-ஹெஹ்- அது சிறு பிள்ளை விளையாட்டு! இப்பொழுது ஐயாவைப் பாருங்கள்!
!
!
!
கூப்பிட்டாயா சகோதரா?
உள்ளே மதுபானக் கடையில்-
அந்த யானைக்கு உங்கள் மீது ஒரு கண் பாஸ்!
இது வரை என் வாழ்க்கையில் எத்தனையோ-எதிரிகளை சந்தித்துள்ளேன்-ஆனால் ஒரு யானையைப் பகைத்துக் கொண்டது இப்பொழுது தான்!
அதனால் தான் "சாரைப் பாம்பு சார்லியை" எனக்காக இங்கே கூட்டி நீங்கள் வரப் போகிறீர்கள்!
சாரைப் பாம்பு சார்லியா?
ஓ-நோ!
சொன்னதைச் செய்யுங்கள்!



சிறிது நேரம் கழித்து-நகரத்தின் கன் ஹோட்டலில் ஒரு அறையில்-
டக்-டக்-
ச-ச-சார்லீ-?
ஒரு நிமிஷம்!
எங்கே போய்த் தொலைந்தன சனியன்கள்?
ஆஹ்-இதோ-கிடைத்து விட்டன!
கைகளை தலைக்கு மேல் தூக்கிக் கொண்டு உள்ளே நுழை!
ச-சரி!
ம்ம்-வந்து-ம்ம்-மிஸ்டர் ரீகன் உங்களைப் பார்க்க விரும்புகிறார்!
வந்த வழியே திரும்பி நட!
இதோ வந்து விட்டார்
அப்பாடி-பிழைத்தேன்!
உன்னை சந்தித்ததில் மகிழ்ச்சி சார்லி!
ஹலோ!
ம்ம்-சரி-ஏதாவது பருகுவோமா?
விஸ்கி-ஸ்ட்ராவோடு!



காசுக்குக் கொலை செய்வதில் நீ கில்லாடி என்பது எல்லோருக்கும் தெரியும்! கோயட் கோட்டைக்கு நீ இந்நேரம் வந்திருப்பது-என் அதிர்ஷ்டமே!
உனக்கு ஒரு வேலை வைத்திருக்கிறேன்! உன் வழக்கமான கூலி எவ்வளவோ அதைத் தந்துவிடுகிறேன்! ஆனால் இந்த ''வேலை''யில் கொஞ்சம் சிக்கல் உள்ளது-
ப்பூ- எனக்கு எல்லா வேலையும் சுலபம் தான்!
அதோ-அந்த விளக்கினருகேயுள்ள பூச்சிகளைப் பார்த்தீர்களா?
மறுகணம்—
டுமீல்!
டுமீல்!
அட்டகாசம்! ஆமாம்-உன் துப்பாக்கிகளில் தோட்டா போட்டிருக்கிறாயா, அல்லது பாச்சான் உருண்டை போட்டிருக்கிறாயா?
நான் யாரைத் தீர்த்துக் கட்டவேண்டும் என்று சொல்லுங்கள்!
ஒ- ஒரு யானையை!
என்னது-?
ஊருக்கு வெளியே கூடாரமிட்டிருக்கும் சர்க்கஸில் உள்ள யானையை நீ காலி பண்ண வேண்டும்!
மறந்து விடாதே- கச்சிதமாக வேலையை முடிப்பதற்கு ஒரு போனஸ் உண்டு!
வைரண்ணே—என்ன இருந்தாலும் ஒரு யானையைத் தீர்த்துக் கட்டுவது சிரமம் தான்!
அப்படியெல்லாம் கிடையாதப்பா-இந்தக் கொலைகாரப் பசங்களுக்கு இதெல்லாம் கை வந்த கலை!
ம-மன்னித்துக் கொள்ளுங்கள்-
என் கை-கையுறைகளை இ-இங்கே விட்டுச் சென்றேனா?


அங்கே கூடாரத்தில்-
சர்க்கஸில் நாம் பிரபல்யமாக வேண்டுமென்றால் நல்லதொரு சாகஸத்தை செய்து காட்ட வேண்டும்!
ஆனால் என்ன செய்வது?
அடடே-யாரது புதிதாக?
சூப்பர் சர்க்கஸ்
ஹலோ-மிஸ்டர்!
ம்ம்ம்-வந்து-
ஓஹோ-எனக்குப் புரிகிறது! உனக்கு இப்பொழுது ஒரு வேலை தேவை! அப்படித் தானே? இது சகஜம் தானப்பா! எல்லோருக்குமே சர்க்கஸின் கலகலப்பையும், துடிதுடிப்பையும் பார்த்த உடன் மனம்லயித்துப் போய்விடுவதுண்டு!
உன்னை வேலைக்கு சேர்த்துக் கொள்கிறேன்-மிருகங்களுக்கு தீனி போடுவது-யானைக்கு தண்ணீர் கொடுப்பது-போன்ற வேலைகளைப் பார்!
யானையை ''கவனிக்க'' வேண்டுமா? ஓ-கே!
ஹ்ம்ம்-யார் கண்டது? சூப்பர்-சர்க்கஸின் பிரபல்யங்களுள் நீயும் ஒருவனாக மாறும் காலம் சீக்கிரத்திலேயே வந்தாலும் வரக்கூடும்!
யார் இந்த கருப்புச் சட்டைக் காரன்? ம்ம்ம்—
படத்திலுள்ள குற்றவாளி ''பொடியன்'' பில்லியைப் பிடித்துக் கொடுப்பவருக்கு
பிலிப்
பரிசு! 50000
ஜோடால்டன்
எங்கோ இவன் முகத்தைப் பார்த்த ஞாபகம் உள்ளதே-
பரிசு!
சாரை சார்லி
சடக்!
ஆ! அவனே தான்!


ரைட்-நான் என் ''வேலையைக்'' கவனிக்கட்டுமா?
ஆஹா-என்ன சுறுசுறுப்பு?!
ஒரு நிமிஷம் கேப்டன்-நம் புதிய நண்பருக்கு வேறு முக்கியமான வேலை கொடுத்தாலென்ன?
ஓ–அதெற்கென்ன லக்கி!
ஜெஸ்டர் உன்னுடைய கோமாளி வேலைக்கு ஒரு உதவியாளன் தேவை என்று சொல்லிக்கொண்டிருந்தாயே
ஆமாம் லக்கி-இந்தப் புதிய-'செட்-அப்'பை சோதனை செய்து பார்க்க உடனடியாக ஒரு ஆசாமி தேவை!
தொப்பியையும், கையுறையையும் கழற்று-
ஆ—ஆனல்-
ரைட்! இந்த விக்கிற்கு அடியில் உள்ள குழாயின் நுனியில் ஒரு ரப்பர் பந்து உள்ளது!
குழாயை உன் சட்டைக்கடியில் வைத்து, பந்தை உன் பாண்டிற்குள் சொருகி விடுகிறேன்!
இனி அசையாதே!
!
உன்னை ஒரு உதை விட்டவுடன் பந்து நசுங்கி, விக்கையும், தொப்பியையும் பறக்கச் செய்கிறது! பிரமாதமாக இல்லை
சரி, இன்னொரு முறை முயற்சி செய்து பார்ப்போம்-அலட்டிக் கொள்ளாமல் நில் அப்பனே!
கோமாளி வேஷத்திற்கு நம் நண்பன் லாயக்கில்லை என்று தெரிகிறது!
வேறு ஏதாவது சரிப்படுகிறதா என்று பார்ப்போம்!



என்ன - சரியாக வருமா?
கிட்டத் தட்ட ராபின் சைசுக் குத் தான் இருக் கிருன் - குறி தவருது என்று நினைக்கிறேன்!
ஊஹூம் - சரிப்படாது! ரொம் பவும் நடுங்கிப் போய் இருக்கிருன் - குறி தவறி எசகு பிசகாக ஆகிவிட்டால் என் மானமே போய் விடும்!
சதக்
தக்
சதக்
சதக்
மிஸஸ் மோரிஸ் - பார் விளையாட் டிற்குப் பயன்படுத்திப் பார்க்கிறீர் களா?
ஐயையோ-
பையனை மேலே அனுப்புங்கள் லக்கி!
தாங்காது - தாங்காது -! யானையை எங்கே? யானையை நான் கவ - னித்துக் கொள்கிறேன்! ஆளை விடு!
யானையைத் தவிர, வேறு பல மிருகங்களை யும் கவனிக்க வேண்டும் தெரியுமா?
உதாரணத்திற்கு, சிங்கத் தையும் பார்த்துக் கொள்ள வேண்டும்!
சிங்கமா? எந்தச் சி–சிங்கத்தை?
அதோ உன் பின்னுல் நிற்கும் சிங்கத்தை!
எ-என் பின்-பின்னுல் சிங்க-மா?
ஆஆஹ்ஹ!
நெல்ஸனை கூண்டிலிருந்து வெளி- யே வரவிடாதீர்கள் என்று எத்தனை தடவை தான் நான் சொல்வது? பாவம் குளிரில் - ஜலதோஷம் பிடித்து விட்டால் அவதிப்படும்!
நீ வா நெல்ஸன் - சூடான காய்கறி சூப் தருகிறேன்!


யானை எங்கே இருக்கிறது? எனக்கு யானையைப் பார்க்கணும்!
ஓ.கே-ஓ.கே- அந்த வாளிகளை எடுத்துக்கொண்டு வா!
நிதானம்- நிதானம்-
எ - என் கையுறைகளை மறந்து விடக்கூடாது! அது இல்லாமல் சுடுவதற்கு என்னால் முடியாது!
பாஹோ!
டுமீல்! டுமீல்!
ஏன் இப்படி பதட்டமாய் இருக்கிறாய் நண்பா?
ஆ ஆ ஆஹ்!
ஹேய்-உன் கையுறைகளை மறந்து விட்டாயே!
என்ன-போன காரியம் முடிந்ததா?
ஊஹூம்-முடியவில்லை- இனி முடியவும் போவதில்லை! கிட்டத்தட்ட என்னை அரைப்பைத்தியமாக ஆக்கிவிட்டார்கள்!
ஆடாமல் அசையாமல், பத்தடி தூரத்தில் நிற்கும் ஒரு யானையை சுட்டுத் தொலைக்க முடியவில்லை- குறி தப்பி விட்டது-! எத்தனை அவமானம்! சே!
?!?


'சாரை சார்லியே' தோற்று விட்டான் அந்தப் பரதேசி களிடம் - இனி என்ன செய்வது?
சர்க்கஸின் மவுசு குறை-யும் வரை பொறுமையாக இருக்க வேண்டியது தான் வைரண்ணே!
ஹேய் - எனக்கு ஒரு யோசனை! சர்க்கஸின் பெயரைக் கெடுக்க ஒரு வழி செய்தாலென்ன-? நான் சொல்கிறபடி ஒரு விசேஷ நோட்டீஸ் அடித்து ஊருக்குள் வழங்க ஏற்பாடு செய்!
அங்கே சர்க்கஸ் முகாமில், சிறிது நேரம் கழித்து-
ஹேய் லக்கி, அதோ வருவது உங்கள் குதிரை ஜாலிதானே?
ஆமாம்! கொஞ்சம் காற்று வாங்கி வருகிறேன் என்று போனான்!
எங்கிருந்தடா பயலே இதைக் கொண்டு வருகிறாய்? கோயட் கோட்டையிலிருந்தா?
லக்கி- உங்கள் குதிரை சாமான்யப் பட்டதல்ல-
ஆமாம்! ஆனால் சர்க்க-ஸில் என்ன சாகஸம் செய்வதென்று தீர்மானிக்காமல் ரொம்பக் குழம்பிப் போயிருக்கிறான் இப்பொழுது!
இதைப் படியுங்கள்!
இன்றிரவு
முக்கிய பொதுக்கூட்டம்!
புதிய சர்க்கஸின் வரவால்
நம் நகரத்திற்கு ஏற்படக்
கூடிய அபாயத்தைப் பற்றி
விவாதம்!
இடம்: ரீகன் மதுபானக்
கடை!
கூட்டத்திற்கு வரும் அனை-
வருக்கும் விஸ்கி இலவசம்!
ஆதரவு தருக!
அடி சக்கை! கீழேயுள்ள வாசகம் ரொம்ப கவர்ச்சிகரமாய் உள்ளதே! நான் கண்டிப்பாய் போயாக வேண்டும்!
மோரிஸ்-உங்களை விட்டு இந்த குடிகாரப் புத்தி இன்னும் போய்த் தொலையவில்லையா?
கவலைப் படாதீர்கள்! இது ஒரு சதி வலை தான் என்றாலும், நாங்களும் அவருடன் கூட்டத்திற்குப் போகிறோம்-ரீகன் என்ன செய்யப் போகிறான் என்று தெரிந்து கொள்வது நல்லது!


கூச்சப் படாமல் வாங்கள் பசங்களா! ஆசை தீரக் குடியுங்கள்! இன்றைய செலவு எல்லாமே என்னுடையது!
சபாஷ்! பலே-பலே!
கேப்டன்-நான் சொல்வதை கேளுங்கள்-
அவரை விட்டுத் தள்ளுங்கள் லக்கி-இனி அவர் காதில் எதுவும் ஏருது!
உங்களுக்காக இதோ ஒரு "ஸ்பெஷல்" கேப்டன்!
ரொம்ப தாங்க்ஸ் நண்பா! எந்நேரம் விரும்பிளுலும் நீ சர்க்கஸுக்கு வந்து போகலாம்!
நண்பர்களே, வருடம் தவருமல் நம் நகரில் அற்புதமான குதிரைப் போட்டிகளை நான் நடத்திவருவது உங்களுக்குத் தெரியும்! ஆனல். இப்பொழுது எங்கிருந்தோமுளைத்த அன்னக் காவடிகள், தங்கள் டப்பாங்கூத்து சர்க்கஸைக் கொண்டு வந்து எனக்குப் போட்டியாக இருக்க முனைகிருர்கள்-
ஆ-ஆனல் சர்க்கஸ்-களும் ஒரு பொழுது போக்குத் தானே?
ஆனல் இந்த சர்க்கஸின் வரவால் நம் நகருக்கு ஏற்படக்கூடிய சுபாவங்களைப் பற்றி கொஞ்சமாமாவது சிந்தித்துப் பார்த்தீர்களா? கொலைகார யானை ஒன்றுபோதாதென-இரத்த வெறி பிடித்த சிங்கம் ஒன்றையும் கொண்டு வந்திருக்கிருர்கள் இந்தப் பயல்கள்!
ஆமாம்! மனிதனை முழுங்கும் சிங்கம் அது-இரத்த வெறிபிடித்த காட்டரசன்! இந்த கேப்டன் மோரிஸின் கட்டுப்பாட்டிற்கு மட்டுமே அடங்கக் கூடியது-சூப்பர் சர்க்கஸில் இதன் சாகஸங்களை காண (விக்கல்) வாரீர்-வாரீர்-
இன்னெரு கிளாஸ் கொண்டாப்பா-!
ஒரு ஓட்டை உடைசல் கூண்டையும் இந்தக் குடிகார ரிங்மாஸ்டரையும் மட்டுமே நம்பி, நாம எப்படி தைரியமாய் இருப்பது? கூண்டை விட்டு சிங்கம் தப்பி விட்டதென்ருல் என்ன கதியாகும்?
ஹேய் - எங்கள் கூண்டு ஓட்டை உடைசலாக இல்லையப்பா-
ஆபத்து! சிங்கம் தப்பி விட்டது!


காது கேட்கிறதா மோரிஸ்? போய் உன் சிங்கத்தை பிடித்துத் தொலை!
க்ர்ர்-க்ர்ர்-க்ர்ர்-
வழியை விடப்பா!
ஓடு! ஓடு!
பதட்டா தீர்கள்! அந்தச் சிங்கம் ஒன்றும் செய்யாது!
அது சுத்த சைவம்!. வெறும் காய்கறி சூப் மட்டுமே குடிக்கும்!
வா, கிளம்புவோம் ஜெஸ்டர்! இனி இங்கு என்ன வேலை?
அந்தக் கிழட்டுச் சிங்கத்தை, கூண்டிலிருந்து வெளியேற்றுவதற்குள் போதும் போதும் என்றாகி விட்டது! கழுத்தில் சுருக்குப் போட்டு, 'தர தர' வென இழுத்துக் கொண்டு தான் ரோட்டில் வந்து விட்டோம்!
அந்த மொடாக் குடியன் என் வலையில் உறுதியாக் சிக்கிவிடுவான் என்று எனக்குத் தெரியும்!
இனி மக்களுக்கு சர்க்கஸ் மீது பயமும், வெறுப்பும் தான் ஏற்படும்! சர்க்கஸுக்கு ஒரு பயல் போக மாட்டான்!
அப்படியில்லை லக்கி! தனியாக இருட்டில் இதுவரை நெல்ஸன் வெளியே போனதில்லை! கண்டிப்பாய் மிரண்டு போய் எங்காவது சுற்றிக் கொண்டிருக்கும்! இந்நேரத்தில் அதனருகே செல்வதே ஆபத்து!
வெளியே-
நாங்கள் தூங்கிக் கொண்டிருந்த பொழுது இது நடந்திருக்கிறது!
குழும்பொலி சப்தம் கேட்டுத் தான் எழுந்து பார்த்தோம்! சிங்கத்தைக் காணோம்!
ஊம்ம்ம்-எல்லாம் ரீகனின் வேலையாய் தானிருக்கும்!
பாவம் நெல்ஸன்! இருளில் எங்கே அலைகிறதோ!



அதே சமயம் நகர ஷெரீப் ஆபீஸில்-
ஐயோ-திரும்பவும் காய்கறி சூப் தானா?
ஜெயில் கைதிகளை இந்த சூப்பைக் கொடுத்தே கொன்று விடு-வீர்களா?
?
WANTED
க்ர்ர்ர்ர்...
யம்மமாாடி...
அங்கே—
எங்கேயும் காணோமே?!
பேசாமல் ஷெரீப்ஃபிடம் போய் உதவி கேட்பது தான் நல்லது!
இத்தனையும் நடந்ததற்குப் பின் சூப்பர் சர்க்கஸை இங்கு ஒரு கணம் கூட தங்க யாரும் அனுமதிக்க மாட்டார்கள்-
SHERIFF
கொ-கொஞ்சம் தயவு செய்து அந்தக் கம்பியில் தொங்கும் என் து-துப்பாக்கியை எடுத்துத் தருகிறீர்களா?


போய் கூண்டைக் கொண்டு வா
ஜெஸ்டர்-நான் சுருக்குப் போட்டு
நல்ஸனை பிடிக்கப் பார்க்கிறேன்!
ாக்கிரதை லக்கி! வழக்
மான நெல்ஸன் அல்ல
இது!
ஜெயிலில் இருப்பதை நினைத்து இன்றுதான்
முதல் முறையாக நான் சந்தோஷப்
படுகிறேன் ஷெரீஃப்!
கதவைப் பூட்டி, சாவியை
ரோட்டில் வீசிவிட்டேன்
பசங்களா!
கதவு நன்ருகப் பூட்டி
யிருக்கிறதல்லவா?
ஜாக்கிரதை லக்கி! துப்
பாக்கியையும் பறிமுதல்
செய்து விட்டது சனியன்!
நெ-நெல்ஸன்-உன் மா-மாஸ்டர்
வந்திருக்கிறேன் - பணிந்து
ந-நட - ஹிக்-
?
ாவான்களே, வெறி பிடித்த விலங்கு
ரின் மீது கூட (விக்) மனிதனுக்குள்ள
ஆதிக்க சக்திக்கு இதோ ஒரு (விக்)
உதாரணம்-
எப்படி? இது போன்ற
சாகஸங்களைக் காண
சூப்பர் சர்க்கஸுக்கு
வாரீர்!
விக் - விக்!


நெல்ஸன் பழைய நிலைக்குத் திரும்பியது-இனி கூண்டிற்கு இட்டுச் செல்லலாம்!
கொஞ்சம் பொறு! நெல்ஸனுல் ஆக வேண்டிய காரியமொன்று பாக்கியுள்ளது!
ஹாாா-வவ்-குட் நைட் டாம்! கடையைப் பூட்டு! நான் தூங்கப் போகிறேன்!
வை-வை-ரண்ணே-அ-அங்கே பா-பாருங்கள்!
அந்த வெறி பிடித்த சிங்கம் தொலையும் வரை கதவை நான் திறக்கப் போவதில்லை!
டாம்-கதவைத் திற-நானும் உள்ளே வருகிறேன்!
எ-என் துப்பாக்கி எங்கே?
விஸ்கி பாட்டில்களுக்கருகே உள்ளது-
உனக்கு ஒரு நல்ல பாடம் புகுட்டவே நாங்கள் வந்தோம்!
எ-எல்லாமே ஒரு ஜோக்-தான்! குதிரைப் போட்டியில் சேர்ந்து கொள்-நீயே போட்டியை ஜெயிப்பதற்கு நான் ஏற்பாடு பண்ணித் தருகிறேன்-என்னை மட்டும் விட்டுவிடு!
போகலாம் வா நெல்ஸன்-
டமார்
எல்லாம் போயாச்சா?
வெளியே வந்து தொலையடா முண்டம்-என் வைளப் பல்லை திரும்பவும் காணோம்!


மறுநாள்- அங்கே முகாமில்-
கேப்டன் மோரிஸ்-உங்களிடம் முக்கிய மானதொரு விஷயம் பேச வந்துள்ளோம்!
எதுவாகயிருந்தாலும் கொஞ்சம் மெல்லப் பேசுங்கள்! தலைவலி பிராணனை வாங்குகிறது!
இது வரை உங்கள் சர்க்கஸால் நகரத்திற்கு வந்துள்ள தொல்லைகள் கொஞ்ச- நஞ்சமல்ல- இனியும் இதை நாங்கள் சகித்துக் கொள்வதாக இல்லை! உடனே இடத்தை காலி செய்யுங்கள்!
சிங்கம் தப்பித்ததற்கு நாங்கள் காரணமல்ல- அது ரீகனின் விஷமம்!
அது மட்டுமல்ல- சூப்பர் சர்க்கஸின் திறமையை ஒரே யொரு முறை பார்த்தால் கூட நீங்கள் மனதை மாற்றிக் கொள்வீர்கள்-
அருமையான யோசனை! ஒரேயொரு காட்சி மட்டும் நடத்த அனுமதியுங்கள்!
ஊ ஹீம்-
எங்கள் வசூல் முழுவதையும் கூட நகர நற்பணி மன்றத்திற்குக் கொடுத்து விடுகிறோம்! ஒரே ஒரு காட்சி நடத்த விடுங்கள்!
நகர நற்பணிக்கு உங்கள் உதவி வேண்டியதில்லை!
சரி-பள்ளிக்கூட நிதிக்காகவாவது-
தேவையில்லை-ரீகன் நிறைய நன்கொடை கொடுத்திருக்கிறார்-
ஆஸ்பத்திரி நிதி-
அதுவும் ரீகன் கொடுத்திருக்கிறார்- நிறையவே!
சரி, நகர ஜெயிலை செம்மை படுத்த உதவுகிறோம்!
அப்படிச் செய்யலாம்- ஜெயில் சாப்பாட்டை நினைத்தாலே குமட்டுகிறது!
சதா காய்கறி சூப் தான்!
ஆகட்டும்! ஒரே ஒரு காட்சி நடத்த அனுமதிக்கிறேன்- அதுவும் ஊருக்கு வெளியே வைத்து நடத்த!
ஹேய்-ஜாலி, கீழே இறங்கி வாப்பா!
ஏதாவது நல்லதொரு சர்க்கஸ் வேலை செய்ய படிக்க வேண்டும்! வா!
36


ஒரே காட்சி!
சூப்பர் சர்க்கஸின்
கோலாகல நிகழ்ச்சி!
வசூல் முழுவதும் ஜெயில் கைதிகளுக்கு நல்ல சாப்பாடு போடுவதற்காக!
இந்த ஒரு ஷோ மட்டும் வெற்றிகரமாக அமைந்தது என்ருல் மக்களுக்கு சர்க்கஸ் மீது மீண்டும் அபிமானம் ஏற்பட்டு விடும்!
இந்தக் காட்சியை எப்படி நாசம் பண்ணுவது என்று எனக்குத் தெரியும்! ஒரு பாட்டில் ''ஸ்பெஷல்'' விஸ்கி கொடு-என் குதிரையைத் தயார் பண்ணு!
அங்கேயோ ஒத்திகைகள் நடந்து கொண்டிருந்தன-
கண்ணு- இரண்டும், இரண்டும் எத்தனை என்று சொல்லு-!
கடக்
கடக்
கடக்
கடக்
அதே போல் நாமும் செய்து பார்ப்போம் ஜாலி! எங்கே -- மூணும் மூணும் எத்தனை என்று சொல்லு பார்ப்போம்!
ஊஹூம்- பலிக்கவில்லை!
ஜாலிக்கு புரியவில்லை போலும் விட்டுத் தள்ளு!
வேறு ஏதாவது ஒரு வித்தையை பழ்கு!
அதே சமயம் தொலைவில்- செவ்விந்தியர் குடியிருப்பினருகே-



வெள்ளை சகோதரன் தீய நோக்குடன் வரவில்லை-உங்கள் தலைவருடன் பேச்சு வார்த்தை நடத்த வந்துள்ளேன்-
உடம்பில் தோல் ஒட்டிக் கொண்டிருப்பதை கறுப்புச் சட்டையன் விரும்பவில்லையா? வெள்ளையர்க்கும்-செவ்விந்தியர்க்கும் ஆகாது என்பது தெரியாதா?
இந்த ''மருந்தை'' சுவைத்துப் பாருங்கள்-உங்கள் மனம் மாறி விடும்!
கடக்-கடக்-கடக்...
ம்ம்ம்-தேவலை! இனி வெள்ளையன் பேச ஆரம்பிக்கலாம்!
கோயட் கோட்டையினருகே சில திருட்டு வெள்ளையர்கள் கூடாரமிட்டுள்ளார்கள்! அவர்களை இன்றிரவு உங்கள் வீரர்கள் அழித்து விட வேண்டும்!
அந்த ராட்சஸ சாத்தான்கள் குடியிருக்கும் கூடாரமானல்-அந்தத் திசை பக்கமே நாங்கள் திரும்பத் தயாராக இல்லை!
ஆ-ஆனல் நீங்கள் யாரையும் கொல்லத் தேவையில்லை! கூடாரத்திற்கு மட்டும் தீ வைத்து விட்டால்போதும். இந்த உபகாரத்தை எனக்காக செய்து கொடுத்தால்-இந்த ''மருந்தில்'' நிறைய பரிசாக தருகிறேன்!
ஹ்ம்ம்-சரி!
ஹையா—!
கடக்-கடக்-கடக்-
ம-மறந்து விடக் கூடாது! நீ நிறைய ''மருந்து'' பரிசாக வேண்டும்! சரிதானே?


ஒரு வழியாக, கோயட் கோட்டையில் சூப்பர் சர்க்கஸ் தன் முதலும் கடைசியுமான காட்சியை நடத்தும் இரவும் வந்தது!
எந்த விதமான பிரச்சனையும் ஏற்படாது ஷெரீஃப்!
ஹ்ம்ம்-
கவனமாய் இரு ஜெஸ்டர்! ரீகன் எப்படியும் இடைஞ்சல் பண்ண முனைவான்!
எனக்கு உடம்பெல்லாம் வேர்த்து ஓடுகிறது!
முதல் தடவையாய்பொதுமக்களுக்கு முன்னர் தோன்றப் போகிறாயல்லவா? அந்தப் பயம் தான் காரணம்!
காட்சியும் துவங்கியது-
ஈடு இணையற்ற வீராங்கனை வனெஸாவின் பார் சாகஸம் துவங்கப் போகிறது!
ஆஹா!
ஹையா!
பலே!
தொடர்ச்சியாய் நடைபெற்ற வித்தைகளும், சாகஸங்களும், பார்வையாளர்களை மெய் மறக்கச் செய்தன-
அடடே- இந்த யானை உட்கார்ந்திருப்பதைப் பார்த்தால் நம்மூர் கிழட்டு ஜட்ஜ் தொப்பையைத் தள்ளிக் கொண்டு கோர்ட் நடத்துவது போலிருக்கிறது!
கிழட்டு முண்டம்!
இனி கத்தி வீச்சு சாகஸம்!
சதக்!
சதக்!
சதக்!
யோவ் ஜட்ஜ்! அந்தப் பையன் இருக்குமிடத்தில் இப்பொழுது உம்மை நிறுத்தி வைத்தால் பலகை முழுவதையும் மறைத்து விடுவீர்!


அப் நெல்ஸன்! ஊம்!
கொர்ர்ர்—
தொடர்ந்து லக்கியும், ஜாலியும் மயிர்க்கூச் செறிய வைக்கும் சாகஸம் நிகழ்த் தினர்!
இனி உன் வேலையைக் காட்டு லக்கி!
என் வயிற்றில் வண்ணத்திப் பூச்சிகள் நாட் டியமாடுகின்றன-
அடேங்கப்பா!
சூப்பர்!
அட்டகாசம்!
ஏய் கிழவா, பொது ஜனங்க ளுக்கு மத்தியில் துப்பாக்கியை பயன்படுத்தியதற்காக உனக்கு அபராதம் விதிக்கப் போகிறேன்! நாளை காலை கோர்ட்டுக்கு வந்து விடு!
சர்க்கஸ் அட்டகாசமாய் தொடர்ந்து கொண்டிருக்கும் அதே சமயம் வெளியே—
புது தினிசான போர்ச் சாயம் பூசிக் கொண்டு ஓசையின்றி செவ்விந்தியர்கள் வந்தனர்—
வீரர்களே, எரியும் அம்புகளை தயார்ப் படுத்துங்கள்!


செவ்விந்தியர்கள்!
ஹா! ஹா! ஹா!
சரியான கோமாளிப் பயல்!
ஹேய்-நான்! சொல்வதைக் கேளுங்கள்! செவ்விந்தியர்கள் நம்மைச் சுற்றிச் முற்றுகையிட்டுள்ளனர்!
ஹா! ஹா! ஹா
ஹோ! ஹோ
ஜெஸ்டரின் வழக்கமான ஆக்டில் இது கிடையாதல்லவா?
ஊஹூம்–
கூடாரம் தீப்பிடித்து விட்டது! தப்பித்து ஓடுங்கள்!
கேப்டன்-பார்வையாளர்களை பத்திரமாக வெளியேற்றுங்கள்! நான் செவ்விந்தியர்களை பார்த்துக் கொள்கிறேன்!
ஹேய்-சண்டை போடாமல் ஓடி விட்டார்களே! எனக்கு ஒன்றுமே புரியவில்லை!
எல்லாம் எனக்கெதிராக திட்டமிடப்பட்ட சதிவேலை! ஐயாவுக்கு சர்க்கஸில் மவுசு ஏற்பட்டு விட்டதைக் கண்டு எல்லோருக்கும் பொறாமை!
நல்ல காலத்திற்கு, பார்வையாளர்கள் அனைவரும் தீங்கின்றி தப்பித்து விட்டனர்!
யாராவது சக்கர வண்டித் தாத்தாவைப் பார்த்தீர்களா?
ரொம்ப தாங்க்ஸ் ஜட்ஜ்!
நீர் அடித்த லூட்டி
உண்மை உள்ளே
விட்டு வந்திருக்க
வேண்டும்!


பொழுது விடிவதற்குள் சர்க்கஸின் சாம்பல்கள் மட்டுமே எஞ்சியிருந்தன-
போச்சு! எல்லாம் போச்சு!
பார்வையாளர்களாவது தப்பித்து விட்டார்களே என்று சந்தோஷப் படுங்கள் மோரிஸ்! விலங்குகளும் பத்திரமாக உள்ளன!
ஹ்ம்ம்-சர்க்கஸை மேற்கொண்டு நடத்த அனுமதிப்பதா?-வேண்டாமா? என்ற பிரச்னை ஒரேடியாகத் தீர்ந்தது!
தீக்கிரையாகாமல் இருந்திருந்தாலுமே கொஞ்ச காலத்தில் சர்க்கஸை சூதாட்டத்தில் இழந்திருப்பீர்கள் மோரிஸ்! ஆகையால் ரொம்பவும் வருத்தப் படாதீர்கள்!
பீப்பிபிப்பீபீஸ் —
துப்பாக்கி சப்தம் கேட்டதும் விரைந்தோடி வந்தோம் சார்!
காலம் கடந்த முயற்சி!
என்னது? தாமதமாய் வந்து விட்டோமா?
ஆ-ஆனால் சினிமாவில் தானே எல்லாம் முடிந்த பிறகு காவல் படை வரும்?
மேற்கொண்டு இங்கு நம்மால் ஆகக் கூடியது ஏதும் இல்லை கர்னல்! நாம் புறப்படுவோம்!
அடுத்த முறை எப்படியும் அந்த செவ்விந்திய ரௌடிகளுக்கு முன்னதாகவே நாம் போய் சேர்ந்து விடுவோம்! இதற்குப் போய் வருத்தப் படலாமா நீங்கள்?
ஆனால் கோயட் கோட்டையிலோ நிலைமை அப்படியில்லை —


சர்க்கஸ் ஒரேடியாக ஒழிந்தது! இனி என் ரோடியோப் போட்டிக்கு இடைஞ்சலே கிடையாது!
நான் போய் அந்த செவ்விந்தியக் கருங்காலிப் பசங்களுக்கு பரிசாக விஸ்கி பாட்டில்களை கொடுத்து விட்டு வந்துவ்டுகிறேன் அண்ணே!
ஓ.கே! நான் கடையை மூடி விட்டுப் போகிறேன்!
?!?
ஹலோ வைரப் பல்! உன்னிடம் கொஞ்சம் பேச வேண்டியுள்ளது!
ஒரு நிமிஷம்! ஒரு நிமிஷம்!
திரும்பவும் என் தாடையை பதம்பார்க்கத் தானே வந்தாய்? இந்தமுறை வைளப் பல்லையாவது பத்திரப் படுத்தி விட்டேன்! நடந்தது எதள்கும் நான் பொறுப்பல்ல!
அட, உன்னை யார் குற்றம் சொன்னது? சர்க்கஸில் இப்பொது வேலை இல்லாமல் போய் விட்டதால், குதிரைப் போட்டியில் என் பெயரையும், சில நண்பர்களின் பெயரையும் கொடுத்து விட்டுப் போக வந்தேன்!
அவ்வளவு தானு? இந்தா இவற்றை பூள்த்தி செய்து விட்டு, போட்டி தினத்தன்று வந்தால் போதும்!
ஓ.கே! போய் வருகிறேன்!
டாடா!
அப்பாடி! தாடை தப்பியது தம்பிரான் புண்ணியம்!



போட்டி நாளும் நெருங்கியது- கோயட் கோட்டையைத் தேடி, ஏகப்பட்ட குதிரை வீரர்கள் வந்து சேர்ந்தனர்-
நகர ஹோட்டல்கள் அனைத்தும் நிரம்பி வழிய ஆரம்பித்ததால்- சில அவசர கால மாற்று ஏற்பாடுகள் செய்யப் பட்டன!
ரீகன் ரோடியோ
மியாவ்
எந்நேரமும் இந்த ஹோட்டலில் காய் கறி சூப் மட்டும் தான் கிடைக்குமா?
நகர ஜெயில் விடுதி
மதுபானக் கடையில் புதிய தொரு பொழுது போக்கு அம்சமாக-
ஒரு நாட்டியக் குழுவை ரீகன் ஏற்பாடு செய்திருந்தான்! பார் வையாளர்கள் கூட்டம் அலை மோதத் தொடங்கியது!
இதே போல் தொடர்ந்து வசூல் வந்து கொண்டிருந்தால் என் பல் வரிசை முழுவதையும் ''மினு மினுக்க'' வைத்து விடலாம்!
ரோடியோ போட்டியைக் காண வெளிநாடுகளிலிருந்து கூட மக்கள் வந்தனர்!



என் பெயர் ரீகன்! கோயட் கோட்டைக்கு உங்களை வர வேற்பதில் மகிழ்ச்சியடை கிறேன்!
ஊ-லா-லா-என் பெயர் பியரி- நான் பாரிஸிலிருந்து வருகிறேன்!
ஏதாவது குடிக்க வேண்டுமா?
உயர்ரக மதுவைத் தவிர வேறு எதையும் நான் தொடுவதில்லை! அது இங்கே கிடைக்காதென்பதால் ஏதாவது ஜூஸ் பருகுகிறேன்!
ஆரஞ்சு ஜூஸ் குடித்துப் பாருங்கள்!
ஐயையோ!
என்ன விஷயம்?
பாஸ்! நான் பெரிய தப்புப் பண்ணி விட்டேன்! செவ்விந்தியர்களுக்கு விஸ்கி பாட்டில்களைக் கொடுப்பதற்குப் பதிலாக ஆரஞ்சு ஜூஸ் பாட்டில்களை மாற்றிக் கொடுத்து விட்டேன்!
அலட்டிக் கொள்ளாதே! இந்தப் பயலுக்கு வேறு ஏதாவது குடிக்கக் கொடு! போட்டி முடிந்த பிறகு செவ்விந்தியர்களுக்கு விஸ்கியைக் கொடுத்து சமாதானப் படுத்தி விடலாம்!
போட்டி தினமும் வந்தது—
என்னோடு உட்காருங்கள் மிஸ்டர் பியரி! போட்டியைப் பற்றி உங்களுக்கு விளக்கமாய் சொல்கிறேன்!
ஓ. கே!


முதலில் முரட்டுக் குதிரையை சவாரி செய்யும் போட்டி! கால்ப் பிடிப்பு-களைப் பயன்படுத்தாமல் பத்து விநா-டிகளுக்கு மேல் வெறி பிடித்த குதிரை மீது போட்டியாளன் உட்கார்ந்திருக்க வேண்டும்!
ஓஹோ!
இரண்டே விநாடி தான்!
ஹேய்! குதிரையை மறந்து விட்டுச் செல்கிறாயே!
பலரும் தோல்வியை சந்தித்த பின்—
விடாதே லக்கி!
ஐந்து நிமிஷ மாச்சு,
என்ன-இன்ன மும் துள்ளப் போகிறாயா?
அப்பா! அம்மா!
முதல் சுற்றில் வெற்றி பெறுகிறார் மிஸ்டர் லக்கி!
என்ன அருமையான சாகஸம்!
பொதுமக்கள் கவனத்திற்கு! கடைசி நிமிஷத்தில் போட்டியில் பங்கேற்கப் பெயர் கொடுத்துள்ளார் வீராங்கனை ஜூலி!
ஜூலியா?
?
?
?



அருமை! அருமை! என்ன அழகான பெண்!
?
ம்ம்-ஆமாம்-வந்து அடுத்து, முரட்டுக் காளையை பிடிக்கும் போட்டி!
சரியாக 4. 376 விநாடி களுக்குப் பின்—
?
அட்டகாசம்! பெரிய கில்லாடி யாய் இருப்பார் போலிருக் கிறதே இந்த லக்கி!
அடுத்த போட்டியாளர்- கேப்டன் மோரிஸ்!
மோ- மோரிஸா?
இனி "காட்டு எருமைச் சவாரிப்" போட்டியில் முதல் வீரர்—
ஹோ! ஹோ! ஹோ! என் வாழ்க்கையிலேயே இவ்வ ளவு சிரித்ததே இல்லை! நான் உங்கள் போட்டி சூப்பர்!


பொதுமக்களே! இனி சூப்பர் சர்க்கஸின் குழு மொத்தமும் உங்கள் முன் ஊர்வலமாய் வரப் போகின்றது!
ஹையா—!
அப்பப்பா! சிரித்து சிரித்து வயி-றெல்லாம் புண்ணாகிப் போய் விட்டது! தூள் கிளப்பி விட்டார்கள்!
நிறுத்துங்கள் இந்தக் கண்றாவியை!
அண்ணே! அதோ பாருங்கள்! செவ்விந்தியர்கள் தாக்க வருகிறார்கள்!
எ-என்னது?
தாக்குங்கள் என் வீரர்களே!
மோசமான மருந்தைக் கொடுத்து சிகப்பு சகோதரர்களை மோசம் செய்துவிட்டான் கருப்புச்சட்டைத் தடியன்! இதற்குப் பதில் சொல்-லியே ஆக வேண்டும்!


அற்புதம்!
ஹேய்-எழுந்திருங்கள் மிஸ்டர் பியரி! தரையில் ஏன் உருளுகிறீர்கள்?
சி-சிரிப்பை- ஹா! ஹா! ஹா! அ-அடக்க ஹோ! ஹோ! ஹோ! ஹோ!
சூப்பர்!
பலே! பலே!
ஜமாய்த்து விட்டார்கள்!
ஜோர்!
வெள்ளையர்களுக்கு மறை கழன்று விட்டதா? சண்டைக்கு வந்துள்ளோம் எங்களைப் பார்த்து சிரிக்கிறார்களே?
உங்கள் எல்லோருக்கும் ஜோரான மருந்து கொடுக்க நான் ஏற்பாடு பண்ணுகிறேன்! கொஞ்சம் பொறுமையாக இருங்கள்!
இந்தக் குழு முழுவதையும் அமர்த்தி என்னோடு ஐரோப்பாவிற்கு கூட்டிச் சென்று வெற்றி காண விரும்புகிறேன்!
உங்களோடு வர குழுவினருக்கு முழு சம்மதம்! ரீகனும, மோரீஸும் செவ்விந்தியர்களும் தங்களுக்குள் பேசி நல்ல முடிவு செய்து கொள்வார்களென நினைக்கிறேன்!
சூப்பர் சர்க்கஸ் வர சம்மதிக்கிறது! மோரிஸ்-ரீகன் குழு உலகமெங்கும் புகழ் ஈட்டப் போகிறது!
ஹேய்-என் பெயர் முதலில் வர வேண்டும்!






"லயன் புக் ஹவுஸ்" நிறுவனத்தின் சார்பாக "ஜூனியர் லயன் காமிக்ஸ்" ஐ வெளியிடுபவரும் ஆசிரியரும்: S. விஜயன். வெளியீடு எண்: 1.
அச்சிட்டோர் : முத்து பைன்ஆர்ட் பப்ளிகேஷன்ஸ், சிவகாசி-626123.


சிக் பில் தோன்றும்
அதிரடி மன்னன்!
ஜூனியர்
லயன்காமிக்ஸ்
முழு வண்ணத்தில்
ரூ. 1.25
விரைவில் வருகிறது!

# முழு நீளச் சித்திரக் கதை!



முழு நீளச் சித்திரக் கதை!




